**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 553/2022.**
**வழக்கு சாட்சி – அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. வாஞ்சிநாதன். | ஜாதி | |
| தந்தை பெயர் | பாஸ்கரன். | தொழில் விவசயாம். | |
| கிராமம் | பாலார்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 39/2025. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.12.2025.

**(1 முதல் 3 வரையிலான எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:-**

(1) நான் தற்போது, பாலார்பட்டியில் குடியிருந்துகொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 24.05.2021 – ஆம் தேதி, மாலை 06.00 மணியளவில் பாலார்பட்டியில் உள்ள எனது தோட்டத்திற்குச் சென்றுவிட்டு, நான் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தேன். அப்போது, தெற்கு தெரு, பஸ் ஸ்டாப் அருகில், தங்கராஜ் என்பவரது வீட்டின் முன்பாக, மகாராஜன் மகன் ஜெகதீசன், துரைச் சிங்கம் மகன் விவேகானந்தம், இளங்கோ மனைவி இலங்கைக் கனி, மகாராஜன் மனைவி அன்னமயில், முருகன், முருகன் மகன் அப்பு என்ற அபூர்வன், சித்ரா ஆகியோர்கள் என்னை வழிமறித்து, என்னை தேவிடியாக மகனே, அவுசாரி மகனே, கொண்டி மகனே என்று அசிங்கமாகப்பேசி, கட்டையாலும், கம்பியாலும் என்னை அடித்தார்கள். அப்போது ஜெகதீசன் என்பவர் அரிவாளால் என் கழுத்துக் நேரே வெட்ட வந்தார், நான் ஒதுங்கிக்கொண்டேன். அப்போது, அங்கிருந்த இலங்கைக் கனி என்பவர் என் உயிர்தளத்தைப் பிடித்ததில், எனக்கு இரத்தம் வந்தது.

அப்போது அங்கிருந்த காமுத்துரை, நீலாவதி, கவிதா, சுமதி ஆகியோர்கள் எதிரிகளிடமிருந்து என்னை விலக்கிவிட்டார்கள்.

(2) பின்னர், வீரபாண்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு, பின்னர், தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்ந்தேன். தற்போது, என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்ததுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**. எங்களுக்குள் பிரச்சனை ஏற்படக் காரணம், எனது பெரியப்பாவின் தோட்டத்தை எதிரிகள் ஒத்திக்கு வாங்கியிருந்தார்கள். நீர்ப் பாய்ச்சுவது சம்பந்தமாக எங்களுக்குள் முன்விரோதம் இருந்தது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

(1) எனது பெரியப்பாவின் பெயர் மனோகரன் என்றால் சரிதான். இலங்கைக் கனியின் அம்மா பெயர் அன்னமயில் என்றால் சரிதான். என் பெரியப்பாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பிள்ளைகள். என்னுடைய தோட்டத்தை அன்னமயில் ஒத்திக்கு வாங்கி, அதனை என்னிடம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். சுமார் 6 மாதத்திற்கு முன்னர்தான் கொடுத்தார்கள். 6 மாதத்திற்கு முன்புவரை, 1–வது எதிரியின் அம்மாவான அன்னமயிலிடம்தான் தோட்டம் இருந்தது என்றால் சரிதான். இலங்கைக் கனி, எனது பெரியப்பவின் தோட்டத்தை ரூ.15,00,000/–த்திற்கு ஒத்திக்கு எடுத்துள்ளார் என்றால் ரூ.15,00,000/–த்திற்கு எடுத்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், அதுபற்றி எனக்குத் தெரியாது. மேற்படி பத்திரத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால், நான் சாட்சிக் கையொப்பம் செய்யவில்லை.

(2) பொதுவாக, ஒத்திக்கு எடுத்த தோட்டத்தை, ஒத்திக்கு எடுத்த நபர்தான் பராமரித்து வருவார் என்றால் சரிதான். அதனடிப்படையில், எனது பெரியப்பாவின் தோட்டத்தில்இருந்த மோட்டார் பழுதானதால், 1–வது எதிரி இலங்கைக் கனி அந்த மோட்டாரை சரி செய்து, திரும்ப வந்து பொருத்திவிட்டார் என்றால், சரிதான். ஆனால், என்னிடம் கேட்டுவிட்டு எடுத்துச் சென்றிருக்க வேண்டும். அ.சா.ஆ.1 ஆன புகாரில், பாலார்பட்டி தெற்குத் தெருவைச் சேர்ந்த மகாராஜன் மகன் ஜெகதீசன்தான் மோட்டாரை எடுத்துச் சென்றதாக கூறியுள்ளது தவறு என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. புகாரில், மகராஜன், மகாராஜன் மகன் ஜெகதீசன், மகாராஜன் மனைவி அன்னமயில், துரைச் சிங்கம் மகன் விவேகானந்தன், முருகன் மகன் அப்பு என்ற அபூர்வன் ஆகியோர்களை இந்த வழக்கிலிருந்து நீக்கம் செய்த விவரம் எனக்குத் தெரியுமா? என்றால், தெரியும், ஆனால், நான் அதற்கு ஆட்சேபனை செய்துள்ளேன். மகாராஜன் மகன் ஜெகதீசன் அன்றைய தினம் அவர் பணியிலிருந்தார், என்றால் சரியல்ல, அவர்தான் என்னை வெட்டவந்தார். 1–வது எதிரி, என் மீது புகார் கொடுத்து அதில் வீரபாண்டி காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை எண். 178/2021 – ஆகப் பதிவு செய்யப்பட்டு, அதன்வழக்கு அசல் வழகரு எண். 40/2022 என்ற வழக்கில் கடந்த 22.12.2022 ஆம் தேதியன்று சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று விடுதலை செய்தார்களா? என்றால், சரிதான்.

(3) எதிரிகளுக்கும், எனக்கும் வேறொரு வழக்கிலிருந்து அதில், நாங்களிருவரும் தேனி, கூடுதல் மகிளா நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டோம் என்றால், நான் மட்டும்தான் விடுதலை செய்யப்பட்டேன், அவர்கள் மீதுள்ள வழக்கு நிலுவையில் உள்ளது. எதிரிகள் மீது கொடுத்த புகாரில், பதிவு செய்யப்பட்ட வழக்கான அசல் வழக்கு எண். 468/2023 என்ற வழக்கில் எதிரிகள் கடந்த 29.02.2024 – ஆம் தேதியன்று தேனி,

மகிளா நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்ட விவரத்தைத் தெரிந்துகொண்டே, நான் விவரம் தெரியாது என்று பொய்யாகச் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள், மனோகரன் என்பவரின் தோட்டத்தை விவசயம் செய்யக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில், எதிரிகள்மீது பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்து, நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த இந்த வழக்கில் சாட்சி சொல்ல முன்வராமல், கடந்த 5 வருடங்களாக காலதாமதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் சொன்னதுபோல், சொல்லியுள்ள தேதியில் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எதிரிகள் கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக, நடக்காத சம்பவத்திற்காக, எதிரிகள் மற்றம் அவர்களின் உறவினர்கள் மீது பொய்யாகப் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்ற சொன்னால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2025.12.17 14:02:31 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**